# ETW ACADEMY – TAMIL ONE LINERS

### 10th Tamil இயல் 1 - அமுதஊற்று

| | |
|---|---|
| 1) "அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே! / முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே! / கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில் / மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!" - என்று தமிழைப் பாடியவர் யார்? | 1) பெருஞ்சித்திரனார் |
| 2) "தென்னன் மகளே! திருக்குறளின் மாண் புகழே! இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே! / மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! / முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - என்று தமிழை வாழ்த்தி பெருஞ்சித்திரனார் எந்நூலில் பாடுகிறார்? | 2) கனிச்சாறு |
| 3) "தென்னன் மகளே!" - என்ற தொடரில், பெருஞ்சித்திரனார் தமிழை யாருடைய மகள் என்கிறார்? | 3) பாண்டியன் |
| 4) சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் என்று பாடியவர் யார்? | 4) க. சச்சிதானந்தன் |
| 5) பெருஞ்சித்திரனாரின் சிறப்புப்பெயர்? | 5) பாவலரேறு |
| 6) எந்தெந்த இதழ்களின் வாயிலாக பெருஞ்சித்திரனார் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்? | 6) தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் |
| 7) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்? | 7) துரை. மாணிக்கம் |
| 8) பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைப்புகள் எவை? | 8) உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள் |
| 9) பெருஞ்சித்திரனாரின் ______ மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாக அமைந்தது. | 9) திருக்குறள் மெய்ப்பொருளுரை |
| 10) "பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் நூல்கள் இன்னும் நாட்டுடைமை ஆக்கப்படவில்லை" - இக்கூற்று சரியா அல்லது தவறா? | 10) தவறு |
| 11) எட்டுத்தொகை நூல்களுள் முதல் நூல் இது. 'நல்' என்ற அடைமொழியோடு வரும் நூல் இது. அந்நூல் எது? | 11) நற்றிணை |
| 12) நல்ல என்னும் அடைமொழியோடு வரும் நூல் இது. எட்டுத்தொகையில் குறைந்த அடியளவில் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பு என்பதால் இந்நூலுக்கு அப்பெயர் வந்தது. இந்த நூலின் பெயர் என்ன? | 12) குறுந்தொகை |
| 13) 'ஒத்த' என்னும் முன்னடையோடு வழங்கெப்பெறும் நூல் எது? | 13) பதிற்றுப்பத்து |
| 14) 'ஓங்கு' என்னும் முன்னடையோடு வழங்கெப்பெறும் நூல் எது? | 14) பரிபாடல் |
| 15) 'கற்றந்தார் ஏத்தும்' என்ற சிறப்போடு வழங்கப்பெறும் நூல் எது? | 15) கலித்தொகை |
| 16) நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்று பாடுபவர் யார்? | 16) பாரதியார் |
| 17) "தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியவனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள" என்பவர் யார்? | 17) கால்டுவெல் |
| 18) "தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள" என்று கால்டுவெல் தனது எந்நூலில் விவரிக்கிறார்? | 18) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் |

| வினா | விடை |
|---|---|
| 19) ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் எவை? | 19) தாள், தண்டு, கோல், தூறு |
| 20) நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடிப்பகுதி? | 20) தாள் |
| 21) கீரை, வாழை முதலியவற்றின் அடிப்பகுதி? | 21) தண்டு |
| 22) நெட்டி, ம்,இளகாய்ச்செடி முதலியவற்றின் அடிப்பகுதி? | 22) கோல் |
| 23) குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடிப்பகுதி? | 23) தூறு |
| 24) கம்பு, சோளம் முதலியவற்றின் அடிப்பகுதி? | 24) தட்டு அல்லது தட்டை |
| 25) கரும்பின் அடிப்பகுதி? | 25) கழி |
| 26) மூங்கிலின் அடிப்பகுதி? | 26) கழை |
| 27) புளி, வேம்பு முதலியவற்றின் அடிப்பகுதி? | 27) அடி |
| 28) அடி மரத்திநின்று பிரியும் மாபெரும் கிளைக்கு என்ன பெயர்? | 28) கவை |
| 29) கவையின் பிரிவுக்கு என்ன பெயர்? | 29) கொம்பு அல்லடு கொப்பு |
| 30) கொம்பின் பிரிவுக்கு என்ன பெயர்? | 30) கிளை |
| 31) கிளையின் பிரிவிக்கு என்ன பெயர்? | 31) சினை |
| 32) சினையின் பிரிவுக்கு என்ன பெயர்? | 32) போத்து |
| 33) போத்தின் பிரிவுக்கு என்ன பெயர்? | 33) குச்சு |
| 34) குச்சியின் பிரிவுக்கு என்ன பெயர்? | 34) இணுக்கு |
| 35) காய்ந்த குச்சு எவ்வாறு அழைக்கப்படுகிறது? | 35) சுள்ளி |
| 36) காய்ந்த சிறுகிளை எவ்வாறு அழைக்கப்படுகிறது? | 36) விறகு |
| 37) காய்ந்த கழி எவ்வாறு அழைக்கப்படுகிறது? | 37) வெங்கழி |
| 38) காய்ந்த கொம்பும் கவையும் அடியும் எவ்வாறு அழைக்கப்படுகிறது? | 38) கட்டை |

- இலை - புளி வேம்பு முதலியவற்றின் இலை
- தாள் - நெல், புல் முதலியவற்றின் இலை
- தோகை - சோளம், கரும்பு முதலியவற்றின் இலை
- ஓலை - தென்னை, பனை முதலியவற்றின் இலை
- சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
- சருகு - காய்ந்த இலை

- துளிர் அல்லது தளிர் - நெல், புல் முதலியவற்றின் கொழுந்து (தாவரத்தின் நுனி)
- முறி அல்லது கொழுந்து - புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
- குருத்து - சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
- கொழுந்தாடை - கரும்பின் நுனிப்பகுதி

- அரும்பு - பூவின் தோற்றநிலை
- போது - பூ விரியத் தொடங்கும் நிலை
- மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை

- வீ - மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
- செம்மல் - பூ வாடின நிலை

- பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
- பிஞ்சு - இளம் காய்
- வடு - மாம்பிஞ்சு
- மூசு - பலாப்பிஞ்சு
- கவ்வை - எள்பிஞ்சு
- குரும்பை - தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு
- முட்டுக் குரும்பை - சிறு குரும்பை
- இளநீர் - முற்றாத தேங்காய்
- நுழாய் - இளம்பாக்கு
- கருக்கல் - இளநெல்
- கச்சல் - வாழைப்பிஞ்சு

- கொத்து - அவரை, துவரை முதலியவற்றின் குலை
- குலை - கொடி முந்திரி போன்றவற்றின் குலை
- தாறு - வாழைக் குலை
- கதிர் - கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்
- அலகு அல்லது குரல் - நெல், தினை முதலியவற்றின் கதிர்
- சீப்பு - வாழைத் தாற்றின் பகுதி

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அளியல் - குளுகுளுத்த பழம்
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
- சொண்டு - பதராய்ப் போன மிளகாய்
- கோட்டான் காய் அல்லது கூகைக்காய் - கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்
- தேரைக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
- அல்லிக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
- ஒல்லிக்காய் - தென்னையில் கெட்ட காய்.

- தொலி - மிக மெல்லியது
- தோல் - திண்ணமானது
- தோடு - வன்மையானது
- ஓடு - மிக வன்மையானது
- குடுக்கை - சுரையின் ஓடு
- மட்டை - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
- உமி - நெல்,கம்பு முதலியவற்றின் மூடி
- கொம்மை - வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி

- நாற்று - நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை
- கன்று - மா , புளி, வாழை முதலியவற்றின் இளநிலை
- குருத்து - வாழையின் இளநிலை
- பிள்ளை - தென்னையின் இளநிலை
- குட்டி - விளாவின் இளநிலை
- மடலி அல்லது வடலி - பனையின் இளநிலை
- பைங்கூழ் - நெல், சோளம் முதலியவற்றின் பசும்பயிர்

39) தமிழாசிரியர், நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் என்ற சிறப்புக்கெல்லாம் சொந்தக்காரர் யார்?

39) இரா.இளங்குமாரனார்

40) இரா.இளங்குமாரனார் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?

41) இரா. இளங்குமாரனார், திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூரில் எதை அமைத்துள்ளார்?

42) இரா.இளங்குமாரனார் உருவாக்கிய நூலகம்?

43) இரா.இளங்குமாரனார், தமிழகம் முழுவதும் ______________ சொற்பொழிவுகளை வழங்கிவந்தவர் ஆவார்.

44) இரா.இளங்குமாரனார் எவ்வழித் திருமணங்களை நடத்திவந்தார்?

45) இரா.இளங்குமாரனார், யாரைப்போலவே இமைகளை மூடி எழுதும் ஆற்றல் பெற்றவர்?

46) இரா.இளங்குமாரனார் அவர்கள் இயற்றிய நூல்கள் எவை?

47) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழி தமிழே! - என்றவர் யார்?

48) க.அப்பாதுரையார் எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?

49) சம்பாவில் மட்டும் எத்தனை உள் வகைகள் இருந்தன?

50) தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளையாத சிறு தானியங்கள் எவை?

51) ஒரு நாட்டின் _____க்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்

52) பாவாணர் தனது எந்தக் கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரித்தாள் வகை, காய்ந்த இலைவகை போன்றவற்றின் சொல்வளங்களை விளக்கியுள்ளார்?

53) தேவநேயப் பாவாணர் எவ்வாறு சிறப்பிக்க்கப்படுகிறார்?

54) தமிழ்ச்சொல்வளம் என்ற கட்டுரை எந்நூலில் உள்ளது?

55) சொல்லாய்வுக் கட்டுரைகள் என்ற நூலை இயற்றியவர்?

56) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?

57) உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர் யார்?

58) போர்ச்சுகீசு நாட்டின் தலைகர் லிஸ்பனில், 1554இல் ______ என்ற நூல் முதன்முதலாகத் தமிழ் மொழியில்தான் மொழிபெயர்க்க்கப்பட்டது.

59) தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கார்டிலா என்னும் நூல் _____ வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.

60) தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கார்டிலா என்னும் நூலின் முழுப்பெயர் என்ன?

40) தமிழ்த்திரு

41) திருவள்ளுவர் தவச்சாலை

42) பாவாணர் நூலகம்

43) திருக்குறள் சொற்பொழிவுகள்

44) தமிழ்வழி

45) திரு. வி. கல்யாணசுந்தரனார்

46) இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பெருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம்

47) க.அப்பாதுரையார்

48) பன்மொழிப் புலவர்

49) 60

50) வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி

51) வளத்திற்கு

52) தமிழ்ச்சொல்வளம்

53) மொழிஞாயிறு

54) சொல்லாய்வுக் கட்டுரைகள்

55) பாவாணர்

56) பாவாணர்

57) பாவாணர்

58) கார்டிலா

59) ரோமன்

60) Carthila de lingoa Tamul e Portugues

| | |
|---|---|
| 61) தமிழில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட கார்டிலா என்னும் நூல் எந்த இரு வண்ணங்களில் மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது? | 61) கறுப்பு & சிவப்பு |
| 62) இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி? | 62) தமிழ் |
| 63) "இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி தமிழே... அந்நூல் கார்டிலா" என்ற செய்திகளையெல்லாம் நாம் எதன் மூலம் அறிகிறோம்? | 63) ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் |
| 64) "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் / மெத்த வணிகலமும் மேவலால் -நித்தம் / அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு / இணைகிடந்த தேதமிழ் ஈண்டு" - என்ற பாடல் இடம்பெறும் நூல்? | 64) தனிபாடல் திரட்டு |
| 65) "முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால் / மெத்த வணிகலமும் மேவலால் -நித்தம் / அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு / இணைகிடந்த தேதமிழ் ஈண்டு" - என்ற பாடலை இயற்றியவர்? | 65) தமிழழகனார் |
| 66) தமிழழகனார் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? | 66) சந்தக்கவிமணி |
| 67) துய்ப்பது என்ற சொல்லின் பொருள் என்ன? | 67) கற்பது & தருதல் |
| 68) மேவலால் என்ற சொல்லின் பொருள் என்ன? | 68) பொருந்துதல் & பெறுதல் |
| 69) தமிழின் அணிகலன்களாக தமிழழகனார் கூறுவது எதை? | 69) ஐம்பெறுங்காப்பியங்கள் |
| 70) தமிழானது சங்கப்பலகையில் அமர்ந்திருந்த யாரால் காக்கப்பட்டது என்று தமிழழகனார் கூறுகிறார்? | 70) சங்கப்புலவர்கள் |
| 71) தமிழ் ___, ___, ___ என முத்தமிழாய் வளர்ந்தது | 71) இயல், இசை, நாடகம் |
| 72) தமிழ் ___, ___, ___ ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது | 72) முதல், இடை, கடை |
| 73) கடலுக்கு உரிய முச்சங்கங்களாக தமிழழகனார் குறிப்பிடுவது? | 73) மூன்று வகையான சங்குகள் (வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம்) |
| 74) கடலைப் பொருத்தவரை முத்தமிழ் என்று தமிழழகனார் குறிப்பிடுவது எதை? | 74) முத்தினை அமிழ்ந்து எடுத்தல் |
| 75) மெத்த வணிகலன் என்ற தொடரில் கடலுக்கானதாக தமிழழகனார் குறிப்பிடுவது? | 75) மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| 76) சங்கத்தவர் காக்க என்று கடலுக்குப் பொருந்துவதாக தமிழழகனார் கூறுவது? | 76) நீரலையைத் தடுத்து சங்கினைக் காத்தல் |
| 77) ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனை வேறு எவ்வாறும் அழைப்பர்? | 77) சிலேடை அணி |
| 78) சிலேடைகள் எங்கு பயன்படுத்தப்படுகின்றன? | 78) செய்யுள், உரைநடை, மேடைப்பேச்சு |
| 79) தனிப்பாடல் திரட்டு எனப்படுவது? | 79) புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பு |
| 80) தமிழழகனாரின் இயற்பெயர் என்ன? | 80) சண்முகசுந்தரம் |
| 81) இலக்கணப் புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்ற தமிழழகனார் எத்தனை சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்? | 81) 12 |

ETW ACAD

82) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காக தொடர்வண்டியிலிருந்து இறங்கிய இவருக்கு மாலை இடப்பட்டு வரவேற்கப்பட்டது. உடனே இவர், "அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார் - இச்சிலேடையை சொன்னவர் யார்?

83) "அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்" என்று சிலைடையாக விமர்சித்த இசை விமர்சகர் யார்?

84) பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டவர் யார்?

85) குறிஞ்சிப் பாட்டை இயற்றியவர் யார்?

86) முதல் தமிழ்க் கண்ணியானது 1983இல் யார் பெயரில் உருவாக்கப்பட்டு விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டது?

87) திருவள்ளுவர் பெயரில் முதல் தமிழ்க் கணிணியை உருவாக்கிய தனியார் நிறுவனம் எது?

88) திருவள்ளுவர் பெயரிலான முதல் தமிழ்க் கணிணி எந்தெந்த மொழிகளைக் கையாளும் விதமாக வடிவமைக்கப்பட்டிருந்தது?

89) சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளி விவரத்துறை அலுவலகத்திற்கும் தலைமைச் செயலகத்திற்கும் கோப்புகளையும் செய்திகளையும் பறிமாறிக்கொண்ட முதல் நேர்வழிக் கணிணி எது?

90) "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" - என்று குறிஞ்சிமலர் என்ற நூலில் உவமையைப் பயன்படுத்தியவர்?

91) "உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அ்துது உருவகமாகும்" - என்றவர் யார்?

92) 'முகநிலவில்' என்ற சொல்லின் இலக்கணம்?

93) வியர்வைமுத்துக்கள் என்ற சொல்லின் இலக்கணம்?

94) “களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று” –ன்று எழுதியவர் யார்?

95) உவம உருபு மறைந்து வந்தால், அதற்கு _____ அணி என்று பெயர்.

96) “புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை / வாய்மையால் காணப் படும்” - என்ற குறளில் பயின்றுவரும் அணி?

97) எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அதை _____ என்கிறோம்

98) "ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று தனது மழையும் புயலும் நூலில் குறிப்பிடுபவர்?

82) கி.வா.ஜகந்நாதன்

83) சுப்புடு

84) தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதன்

85) கபிலர்

86) திருவள்ளுவர்

87) டி.சி.எம் டேட்டா புராடெக்ட்ஸ்

88) தமிழ் & ஆங்கிலம்

89) திருவள்ளுவர்

90) நா.பார்த்தசாரதி

91) தண்டி

92) உருவகம்

93) உருவகம்

94) அறிஞர் அண்ணா

95) எடுத்துக்காட்டு உவமை அணி

96) எடுத்துக்காட்டு உவமை அணி

97) இணை ஒப்பு (analogy)

98) வ.ராமசாமி

99) “ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுநபோலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்” என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டிருப்பவர்?

100) உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்து எழுதுவது இக்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

101) “சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல்,'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா ?' என்னும் - என்று எழுதியவர் யார்?

102) “தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்" என்று தனது எந்நூலில் இரா.பி.சே எழுதியுள்ளார்?

103) “வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள்பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும், இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்” என்று தனது நாட்டுப்பற்று என்னும் கட்டுரைத் தொகுப்பில் எழுதியவர் யார்?

104) படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்லுவது?

105) ‘இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?’ என்றத் தொடரில் வெளிப்படும் உத்தி?

106) முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதும் உத்திக்கு என்ன பெயர்?

107) 'கல்ப்பில்லாத பொய்' என்ற தொடரில் பயன்படுத்தப்பட்டுள்ள உத்தி?

108) சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதும் உத்திக்கு என்ன பெயர்?

109) “குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்: மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!” என்று தனது எழுத்தில் எதிரிணை இசைவு (Antithesis) உத்தியை பயன்படுத்தியுள்ளவர் யார்?

110) "பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் - ஒரு கால கட்டம் - ஒரு திருப்பம் என்று கூறுகிறேன்." என்றவர் யார்?

111) இந்தியாதான் என்னுடைய மோட்சம்; இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" என்றுபாடியவர் யார்?

112) புதிய உரைநடை என்னும் நூலுக்காக சாகித்ய அகாதமி விருது வென்றவர் யார்?

99) தொல்காப்பியர்

100) இலக்கணை

101) தமிழ்த்தென்றல் திரு.வி.க

102) தமிழின்பம்

103) மு.வரதராசனார்

104) முரண்படு மெய்ம்மை

105) முரண்படு மெய்ம்மை (paradox)

106) சொல்முரண் (Oxymoron)

107) சொல்முரண் (Oxymoron)

108) எதிரிணை இசைவு (Antithesis)

109) தோழர் ப.ஜீவானந்தம்

110) அண்ணா

111) பாரதியார்

112) எழில்முதல்வன்

| | |
|---|---|
| 113) உரைநடையின் அணிநலன்கள் என்னும் கட்டுரை எந்நூலில் இடம்பெற்றுள்ளது? | 113) புதிய உரைநடை |
| 114) எழில்முதல்வனின் இயற்பெயர் என்ன? | 114) மா.இராமலிங்கம் |
| 115) எழில்முதல்வன் ____ கல்லூரியில் பயின்று பின்னர் அங்கேயே பேராசிரியர் பணியாற்றியவர். | 115) மாநிலக் கல்லூரி |
| 116) எழில்முதல்வன் தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றிய இடங்கள்? | 116) குடந்தை ஆடவர் கல்லூரி & பாரதிதாசன் பல்கலைக்கழகம் |
| 117) எழில்முதல்வன் _____ படைப்பதில் வல்லவர் | 117) மரபுக் கவிதை & புதுக்கவிதை |
| 118) எழில்முதல்வனின் நூல்கள் யாவை? | 118) இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் |
| 119) "வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும் / மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கி / தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" என்ற அடிகள் இடம்பெறும் நூல் எது? | 119) சிலப்பதிகாரம் |
| 120) "தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" என்ற அடிகளில் குறிப்பிடப்படும் சிறுமலை எம்மாவட்டத்தில் உள்ளது? | 120) திண்டுக்கல் |
| 121) சார்பெழுத்துக்கள் எத்தனை? | 121) 10 |
| 122) சார்பெழுத்துக்கள் எவை? | 122) உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் |
| 123) அளபெடுத்தல் - என்பதன் பொருள் என்ன? | 123) நீண்டு ஒலித்தல் |
| 124) பேச்சுமொழியில் எப்போதெல்லாம் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம்? | 124) உணர்வுக்காகவும், இனிய ஓசைக்காகவும் |
| 125) செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும். அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது ___ எனப்படும். | 125) உயிரளபெடை |
| 126) உயிரளபெடை எத்தனை வகைப்படும்? | 126) 3 |
| 127) செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலை _____ அளபெடை என்போம். | 127) செய்யுளிசை |
| 128) செய்யுளிசை அளபெடை வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது? | 128) இசைநிறை அளபெடை |
| 129) ஓஒதல் வேண்டும் என்றத் தொடரில் செய்யுளிசை அளபெடை எங்கு இடம்பெறுகிறது? | 129) மொழி முதல் |
| 130) உறாஅர்க்கு உறுநோய் என்றத் தொடரில் செய்யுளிசை அளபெடை எங்கு இடம்பெறுகிறது? | 130) மொழியிடை |
| 131) நல்ல படாஅ பறை - என்றத் தொடரில் செய்யுளிசை அளபெடை எங்கு இடம்பெறுகிறது? | 131) மொழியிறுதி |

ETW ACADEMY

132) செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது _____ அளபெடை ஆகும்.

133) இன்னிசை அளபெடைக்கு எடுத்துக்காட்டாக அமையும் குறள்?

134) செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது _____ அளபெடை ஆகும்

135) உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார் / வரனசைஇ இன்னும் உளேன் - என்றக் குறளில் நசை என்றால் விருப்பம் என்று பொருள். _____ என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது.

136) நசை என்ற பெயர்ச்சொல்லானது, நசைஇ என்று அளபெடுத்ததன் மூலம் எவ்வாறு மாறியது?

137) செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய _____ எழுத்துக்கள் பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

138) ஒற்றளபெடைக்கு எடுத்துக்காட்டாக அமைந்த குறள்?

139) ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது ____ ஆகும்.

140) சொல் ____ திணைகளையும் ____ பால்களையும் குறிக்கும்

141) சொல் எத்தனை இடங்களில் வரும்?

142) சொல் எவ்வழக்கில் வரும்?

143) ஒரு சொல்லானது வெளிப்படையாக விளங்குமா அல்லது குறிப்பாக விளங்குமா?

144) மொழி எத்தனை வகையாக அமையும்?

145) "ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி / பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன." என்று கூறும் நூல் எது?

146) ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது?

147) 'கண்' என்பது மொழியின் எந்த வகை?

148) 'கண்ணன்' என்பது மொழியின் எந்த வகை?

149) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருமாயின் அது?

150) "கண்ணன் வந்தான்" என்பது மொழியின் எந்த வகை?

151) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது?

152) எட்டு என்ற சொல்லின் இரு பொருள்கள் யாவை?

132) இன்னிசை அளபெடை

133) கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே / எடுப்பதூஉம் எல்லாம் மழை.

134) சொல்லிசை அளபெடை

135) விரும்பி

136) வினைஅடையாக

137) மெய்யெழுத்துக்கள்

138) எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர் / வெஃஃ குவார்க்கில்லை வீடு

139) சொல்

140) இரு, ஐந்து

141) மூவிடங்களிலும்

142) உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும்

143) இருவாறும்

144) 3 (தனி மொழி, தொடர் மொழி, பொதுமொழி)

145) நன்னூல்

146) தனி மொழி

147) தனிமொழி

148) தனிமொழி

149) தொடர்மொழி

150) தொடர்மொழி

151) பொதுமொழி

152) எண், எள் + து = எள்ளை உண்

ETW ACAD

153) வேங்கை என்ற சொல்லின் இரு பொருள்கள் யாவை?

154) ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண் இடம் காலம் பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது ____ எனப்படும்.

155) ஈதல், நடத்தல் ஆகிய சொற்களின் பொது இலக்கணம் என்ன?

156) நடத்தல் என்ற சொல் எவ்வகை தொழிற்பெயர் ஆகும்?

157) நடை - என்பதன் இலக்கணம் என்ன?

158) நடத்தை - என்பதன் இலக்கணம் என்ன?

159) வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் ___ எனப்படும்

160) வாழ்க்கை என்பதன் இலக்கணக் குறிப்பு அறிக:

161) ஆளல் - என்பதன் தொழிற்பெயர் வகை?

162) நடவாமை, கொல்லாமை ஆகியவை எவ்வகை தொழிற்பெயர்கள் ஆகும்?

163) எதிர்மறைப் பொருளில் வரும் தொழிற்பெயர்?

164) விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் ____ தொழிற்பெயராகும்.

165) முதனிலைத் தொழிற்பெயருக்கு எடுத்துக்காட்டுகள்?

166) கேடு, சூடு ஆகிய சொற்களின் இலக்கணம்?

167) விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர்?

168) காட்சி என்ற சொல்லின் இலக்கணம்?

169) ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது ____ எனப்படும்

170) வந்தவர், பொறுத்தார் - ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு?

171) வென்றான் என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

172) வென்றோர் என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு?

173) வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நின்றால் அது?

174) வினையானது தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறித்தால் அது?

175) தொழிற்பெயர், வினையாலனையும் பெயர் ஆகிய இரண்டில் காலம் காட்டுவது?

153) மரம், வேம் + கை = வேகின்ற கை

154) தொழிற்பெயர்

155) தொழிற்பெயர்

156) விகுதி பெற்ற தொழிற்பெயர்

157) விகுதி பெற்ற தொழிற்பெயர்

158) விகுதி பெற்ற தொழிற்பெயர்

159) விகுதி பெற்ற தொழிற்பெயர்

160) விகுதி பெற்ற தொழிற்பெயர் (வாழ் - வினையடி; கை - விகுதி)

161) விகுதி பெற்ற தொழிற்பெயர் (ஆள் - வினையடி; அல் - விகுதி)

162) எதிர்மறைத் தொழிற்பெயர்

163) எதிர்மறைத் தொழிற்பெயர்

164) முதனிலைத் தொழிற்பெயர்

165) நட, வாழ், ஆள், தட்டு, உரை, அடி, ஓடு, வா

166) முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள் (கெடு என்பதன் முதல் எழுத்து திரிந்து கேடு என்றானது)

167) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

168) தொழிற்பெயர் (விகுதி பெற்றது = காண் + சி)

169) வினையாலனையும் பெயர்

170) வினையாலனையும் பெயர்கள்

171) வினைமுற்று

172) வினையாலனையும் பெயர் (வென்றோர் என்ற சொல்லின் பொருள் வென்றவர்கள்)

173) தொழிற்பெயர்

174) வினையாலனையும் பெயர்

175) வினையாலனையும் பெயர்

ETW ACA

# ETW ACADEMY – TAMIL ONE LINERS

176) தொழிற்பெயர் ____ இடத்திற்கு உரியது

177) வினையாலனையும் பெயர் ____ இடத்திற்கு உரியது

178) பாடியவள் - இலக்கணக்குறிப்பு?

179) கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

180) ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது-

181) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -

182) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் -

183) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே -

184) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை -

185) "மரமது மரத்தில் ஏறி / மரமதைத் தோளில் வைத்து / மரமது மரத்தைக் கண்டு / மரத்தி னால் மரத்தைக் குத்தி / மரமது வழியே சென்று / வளமனைக் கேகும் போது / மரமது கண்ட மாதர் / மரமுடன் மரம் எடுத்தார்" என்ற தனிப்பாடல் திரட்டு பாடலை இயற்றியவர் யார்?

186) மொழிபெயர்க்க: If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - Nelson Mandela

187) மொழிபெயர்க்க: Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going. - Rita Mae Brown

188) “தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை / தேறும் சிலப்பதி காரமதை / ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம் ஓதி யுணர்ந்தின் புறுவோமே” - என்று பாடியவர் யார்?

189) கல் என்ற சொல்லின் கூட்டப்பெயர்?

190) பழம் என்ற சொல்லின் கூட்டபெயர்?

191) புல் என்பதன் கூட்டப்பெயர்?

192) ஆடு என்பதன் கூட்டப்பெயர்?

193) காத்திருக்கிறார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

176) படர்க்கை

177) மூவிடங்களுக்கும் (தன்மை, முன்னிலை, படர்க்கை)

178) வினையாலனையும் பெயர்

179) கட்டு : முதனிலைத் தொழிற்பெயர்; சொட்டு : முதனிலைத் தொழிற்பெயர்; வழிபாடு : விகுதி பெற்ற தொழிற்பெயர்; கேடு: முதனிலை திரிந்த தொழிற்பெயர்; கோறல் : விகுதி பெற்ற தொழிற்பெயர்

180) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

181) சருகும் சண்டும்

182) எம் + தமிழ் + நா

183) பாடல்; கேட்டவர்

184) மணி வகை

185) சந்தக்கவிராசர்

186) நீங்கள் ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொண்டு அவன் மூளைக்குச் செல்கிறது. ஆனால் அவனுடைய மொழியில் பேசினால் அது அவன் நெஞ்சத்தைத் தொடும். - நெல்சன் மண்டேலா

187) மொழியே கலாச்சாரத்தின் வழிகாட்டி. அதுவே மக்கள் எங்கிருந்து வந்தார்கள் மற்றும் எங்குப் போகிறார்கள் என்பதைச் சொல்லும். - ரிட்டா மே பிரவுண்

188) கவிமணி தேசிக விநாயகனார்

189) குவியல்

190) குலை

191) கட்டு

192) மந்தை

193) காத்திருக்கிறவர்

194) உண்டார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

195) சந்தித்தார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

196) படித்தார் என்ற வினைமுற்றை வினையாலனையும் பெயராக மாற்றுக.

197) "தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே / தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே / ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே / உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே" - என்று பாடியவர்?

198) வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே / மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே / தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே / தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே - என்று பாடியவர்?

199) அடவி என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

200) அவல் என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

201) சுவல் என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

202) செறு என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

203) பழனம் என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

204) புறவு என்ற சொல்லின் அகராதிப் பொருள்கள்?

205) நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் என்ற நூலின் ஆசிரியர்?

206) தவறின்றித் தமிழ் எழுதுவோம் - என்ற நூலின் ஆசிரியர்?

207) பச்சை நிழல் - என்ற நூலின் ஆசிரியர்?

கலைச்சொல் அறிவோம்

Vowel - உயிரெழுத்து
Consonant - மெய்யெழுத்து
Homograph - ஒப்பெழுத்து
Monolingual - ஒரு மொழி
Conversation - உரையாடல்
Discussion - கலந்துரையாடல்

194) உண்டவர்

195) சந்தித்தவர்

196) படித்தவர்

197) கா.நமச்சிவாயர்

198) கா.நமச்சிவாயர்

199) காடு, திரள், தொகுதி, சோலை

200) பள்ளம், விளைநிலம், குளம், நெல் இடியல்

201) பிடரி, முதுகு, மேடு, தொல்லை

202) வயல், குளம், பாத்தி, கோபம்

203) வயல், மருதநிலம், பொய்கை

204) புறா, சிறுகாடு, முல்லைக்கொடி, பயிரிடும் நிலம்

205) முனைவர் சேதுமணி மணியன்

206) மா.நன்னன்

207) உதயசங்கர்